# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044389

1. District : மாவட்டம் பெரம்பலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 02 Date: நாள் 19.04.2023

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.04.2023 Date to : நாள் வரை 18.04.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12:30 Hrs Time to : நேரம் வரை 11.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.04.2023 Time : நேரம் 17.30 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.04.2023 Time : நேரம் 17.30 Hrs

4. Type of Information : Written/Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கூ.களத்தூர், கிராம நிர்வாக
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அலுவலர் அலுவலகம், சுமார் 30 கி.மீ தெற்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சின்னதுரை (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மூக்கன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 75/2023 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் மத்திய அரசுபணி (ஓய்வு) (g) Address : முகவரி க.எண் – 04/203, தென்றல் நகர், எம்.ஜி.ஆர் சிலை அருகில், கூ.களத்தூர் கிராமம், ஆலத்தூர் வட்டம் பெரம்பலூர் மாவட்டம்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. தீனதயாளன், VAO, கூ.களத்தூர் கிராமம்.
2. திருமதி. ஈஸ்வரி, Village Assistant, கூ.களத்தூர் கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

18.04.2023 மாலை சுமார் 17.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் K.S.ஹேமச்சித்ரா ஆகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது திரு.M.சின்னதுரை, என்பவர் என் முன் அஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவினைப் பெற்று புகாரின் தன்மையும் புகார்தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகார் மனுவின் சாரம் பின்வருமாறு, அனுப்புநர்: M.சின்னதுரை வயது-75 த.பெ மூக்கன், க.எண்-4/203, தென்றல் நகர், எம்.ஜி.ஆர் சிலை அருகில், து.களத்தூர் கிராமம், ஆலத்தூர் வட்டம்,பெரம்பலூர் மாவட்டம்.

(Separate Sheet Enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the investigation / Refused investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே தந்த முறையீட்டின் வரிசை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.சின்னதுரை

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.04.2023 07.20 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் கே.சி.ஹேமசித்ரா, DSP
Rank: நிலை .................... No. எண் ..........
V&AC, பெரம்பலூர்.
19.04.2023

பெறுநர்: உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். அய்யா/அம்மையீர், நான் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டம் து.களத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் திருச்சி துப்பாக்கி தொழிற்சாலையில் மாஸ்டர் கிராப்ட்மேன் வேலைப் பார்த்து 2008-ம் ஆண்டில் பணி ஓய்வுப் பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் வீரம்மாள் மற்றும் எனக்கு கீதா மற்றும் ஜீவா என்று இரண்டு மகள்களும் மற்றும் லோகநாதன் என்ற ஒரு மகனும் உள்ளார்கள். எனது மகள் கீதாவை பண்ருட்டியைச் சேர்ந்த ராம்குமார் என்பவருக்கும் மற்றொரு மகளான ஜீவாவை மதுரையைச் சேர்ந்த நாகராஜன் என்பவருக்கும் சீதனத்துடன் சிறப்பாக திருமணம் செய்து வைத்து அவர்கள் இருவரும் குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். எனது மகனான லோகநாதன் திருச்சியைச் சேர்ந்த அபிநயா என்பவரை திருமணம் செய்து கோயமுத்தூரில் வசித்து வருகிறார். இந்நிலையில் எனது மனைவியான வீரம்மாள 2021-ம் ஆண்டு இயற்கை மரணம் எய்தினார். எனது மனைவி பெயரில் து.களத்தூர் கிராமத்தில் நத்தம் புல எண்-167/5(பழைய எண்),167/26(புதிய எண்ணில்) சுமார் 00172ச.மீ பரப்பளவில் நத்தம் பட்டாவில் வீட்டுடன் கூடிய மனை இருந்தது. அவரது மரணத்திற்கு பிறகு தகுந்த வாரிசுச் சான்று பெற்று மேற்படி மனையினை எனது மனைவியின் வாரிசுதாரர்களான கீதா, லோகநாதன், ஜீவா மற்றும் எனது பெயரில் து.களத்தூர் கிராம மனைவரி பட்டா எண்-1132-ல் 17.02.2023-ம் தேதி பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட கூட்டுப்பட்டாவில் இருக்கும் மனையினை எனது மகன் பெயரில் மாற்றம் செய்ய என்ன வழிவகை உள்ளது என்று கடந்த 17.02.2023-ம் தேதி எங்களுக்கு நத்தம் கூட்டுப்பட்டா வழங்கிய கிராம நிர்வாக அலுவலரான திரு.தீனதயாளன் என்பவரிடம் கேட்டதற்கு எனது இரு மகள்களிடமும் மேற்படி நத்தம் தனிப்பட்டா வழங்குவதற்கு எந்தவிதமான ஆட்சேபனை இல்லை என்று சம்மத உறுதிமொழி நோட்டரி பப்ளிக் முன்னிலையில் பெற்றுக் கொண்டு அவரைவந்து பார்க்கும் படி கூறினார். அதுபோலவே நானும் கடந்த 13.04.2023 அன்று து.களத்தூர் வி.ஏ.ஓ அலுவலகம் சென்று வி.ஏ.ஓ திரு.தீனதயாளன் அவர்களை மதியம் சுமார் 12.30 மணிபோல் நேரில் சந்தித்து எனது கோரிக்கையினை மனுவாக கொடுத்தேன். எனது மனுவினை பரிசீலனை செய்துவிட்டு து.களத்தூர் வி.ஏ.ஓ உங்கள் மனுவில் எல்லா ஆவணங்களும் சரியாக உள்ளது எனினும் உங்கள் மகன் பெயரில்

தனிமனைவரிப்பட்டா கொடுப்பதற்கு நிறைய செலவு ஆகும் என்று சொன்னார். அதற்கு நான் எவ்வளவு செலவு ஆகும் என்று கேட்டதற்கு அலுவலக செலவு மற்றும் உயரதிகாரிகளை கவனிப்பதற்கு ரூ-25000-க்கு மேல செலவாகும் அந்த பணத்தை கொடுத்தீங்கனா உங்க வேலை சுமூகமாக முடிந்துவிடும். மற்ற விபரங்களை எனது கிராம உதவியாளர் திருமதி. ஈஸ்வரியிடம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டார். நானும் கிராம உதவியாளர் ஈஸ்வரியிடம் தனிப்பட்டா பெறுவதற்கு ரூ-25000 செலவாகுமா என்று கேட்டதற்கு அவர் தாலுகா அலுவலகத்தில் பணம் இல்லாம எந்த பேப்பரும் நகராது. பணம் கொடுத்தாதான் வேலையாகும் என்று சொல்லிவிட்டார். நானும் சரிமா நான் பாக்குறேனு சொல்லிவிட்டு எனது வீட்டிற்கு சென்று விட்டேன். 3 நாட்கள் அரசு விடுமுறைக் கழித்து வி.ஏ.ஓ-விடம் எனது நிலைமையை நேரில் முறையிட்டு எனது மனுவினை பரிசீலனை செய்ய பணிந்து கேட்கலாம் என்று எண்ணி 17.04.2023-ம் தேதியான திங்கட்கிழமையன்று நண்பகல் சுமார் 12.00 மணி போல் வி.ஏ.ஓ அலுவலகம் சென்று எனது மனு சம்மந்தமாக கேட்டதற்கு வி.ஏ.ஓ நான் ஏற்கனவே உங்களிடம் ரூ-25000-ம் செலவாகும் என்று சொல்லிவிட்டேன் நீங்கள் பணம் இல்லாமல் இந்த அலுவலகம் வந்து நிற்பது முற்றிலும் பயனற்றது என்று சொன்னார். அதற்கு நான் ஒரு ஓய்வுபெற்ற மத்திய அரசு ஊழியர் என்னிடமே இவ்வளவு பணம் கேட்கிறீர்களே என்று கேட்டதற்கு வி.ஏ.ஓ வேண்டுமென்றால் சுமார் ரூ.5000- குறைத்துக் கொண்டு ரௌண்டா ரூ.20000- நாளை காலை எங்களிடம் வந்துகொடுங்கள் உங்களுக்கு உங்கள் மகன் பெயரில் பட்டா வாங்கி கொடுப்பது எனது பொறுப்பு என்று சொல்லி அனுப்பிவிட்டார். நான் இன்று 18.04.2023 சுமார் 11.00 -மணிக்கு வி.ஏ.ஓ அலுவலகம் சென்றபோது வி.ஏ.ஓ எனது பட்டா தொடர்பாக ஆலத்தூர் தாலுகா அலுவலகம் சென்றுள்ளதாகவும் ரூ.20000- பணத்துடன் நாளை வந்து எங்களை சந்திக்குமாறு கூறி கிராம உதவியாளர் திருமதி.ஈஸ்வரி என்னிடம் கூறி அனுப்பி வைத்தார். இந்நிலையில் நான் வெளியே வந்து நம்மிடம் எல்லா ஆவணமும் சரியாக இருந்தும் து.களத்தூர் வி.ஏ.ஓ-வான திரு.தீனதயாளன் மற்றும் கிராம உதவியாளர் திருமதி.ஈஸ்வரி நம்மிடம் லஞ்ச பணமாக ரூ.20000- கேட்குறாங்களே என்று யோசித்துவிட்டு அவர்கள் கேட்ட பணத்தை லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லாததால் அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20,000/-யை எடுத்துக் கொண்டு து.களத்தூர் வி.ஏ.ஓ-வான திரு.தீனதயாளன் மற்றும் கிராம உதவியாளர் திருமதி.ஈஸ்வரி மீது இன்று

18.04.2023-ம் தேதி மாலை 17.30 மணிக்கு லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க வந்துள்ளேன். மேற்படி து.களத்தூர் வி.ஏ.ஓ-வான திரு.தீனதயாளன் மற்றும் கிராம உதவியாளர் திருமதி.ஈஸ்வரி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இடம்-பெரம்பலூர், நாள்- 18.04.2023 இப்படிக்கு- (கையொப்பம்- M.சின்னதுரை) அந்த மனுவை நான் பெற்று அதில் Sir, Received this Computer typed complaint from the complainant on 18.04.2023 at 17.30 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 19.04.2023 at 06.30 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.02/2023, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) K.S.Hema Chithra, Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

19/4/2023

[K.S.HEMACHITHRA,
DSP, V&AC
PERAMBALUR]